மகாராஷ்டிர துணை முதல்வரை விமர்சித்த வழக்கு

நகைச்சுவை நடிகர் முன்ஜாமீன் மனு முடித்துவைப்பு

உயர் நீதிமன்றம் உத்தரவு



சென்னை, ஏப். 18: மகாராஷ்டிரா துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவை விமர்சித்த வழக்கில் நகைச்சுவை நடிகர் குணால் கம்ரா மும்பை உயர் நீதிமன்றத்தில் இடைக்கால நிவாரணம் பெற்றுள்ளதால், அவரது முன்ஜாமீன் மனுவை முடித்து வைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மகாராஷ்டிராவில், நகைச்சுவை நடிகர் குணால் கம்ரா, சமீபத்தில் தனது யூடியூப் சேனலில் ஒரு வீடியோவை வெளியிட்டார். அதில், சிவசேனாவை உடைத்து, பாஜ கூட்டணியில் இணைந்து ஏக்நாத் ஷிண்டே முதல்வரானதை விமர்சித்திருந்தார். இதையடுத்து, குணால் கம்ரா மீது மும்பை காவல் துறை பதிவு செய்துள்ளது. இந்த வழக்கில் தனக்கு டிரான்சிட் முன் ஜாமீன் (வேறு மாநிலத்தில் பதியப்பட்ட வழக்கில் முன் ஜாமீன் கேட்டு தாக்கல் செய்யப்படும் மனு) கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் குணால் மனு தாக்கல் செய்தார்.

அந்த மனுவை விசாரித்த நீதிபதி சுந்தர் மோகன், மனுதாரர் குணால் கம்ராவுக்கு இடைக்கால முன்ஜாமீன் வழங்கி உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதி சுந்தர் மோகன் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, குணால் கம்ரா சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் வி.சுரேஷ், வழக்கை ரத்து செய்ய கோரி குணால் கம்ரா தாக்கல் செய்த மனு மும்பை உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. தீர்ப்பு வரும் வரை குணால் கம்ராவை கைது செய்ய கூடாது என்று மும்பை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்றார்.

இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதி, மும்பை உயர் நீதிமன்றம் இடைக்கால நிவாரணம் வழங்கியுள்ளதால் இங்கு வழக்கை தொடர்ந்து நடத்த அவசியமில்லை என்று கூறி வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டார்.

சில மாதங்களாக திடீரென்று காணாமல் போனது ஏன்?

நடிகை நஸ்ரியா நசீம் பரபரப்பு அறிக்கை

சென்னை, ஏப்.18: தமிழில் 'நேரம்', 'ராஜா ராணி', 'நய்யாண்டி', 'வாயை மூடி பேசவும்', 'திருமணம் எனும் நிக்காஹ்' ஆகிய படங்களின் மூலம் பிரபலமானவர், நஸ்ரியா நசீம் (30). மலையாளத்தில் முன்னணி நடிகைகளில் ஒருவராக இருக்கும் அவர், தெலுங்கு படங்களிலும் நடித்துள்ளார். 2014ல் மலையாள நடிகர் பஹத் பாசிலை காதல் திருமணம் செய்த அவர், திருமணத்துக்கு பிறகும் நடித்து வருகிறார். கடைசியாக மலையாளத்தில் 'சூக்ஷமதர்ஷினி' என்ற படத்தில் நடித்திருந்தார். இப்படத்தின் புரமோஷன் நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அவர், பிறகு பொதுவெளியில் வராமல் இருந்தார். சமூக வலைத்தளங்களில் சுறுசுறுப்பாக இயங்கி வந்த அவர், பல மாதங்களாக இன்ஸ்டாகிராமில் போட்டோக்கள் எதுவும் வெளியிடவில்லை. இந்நிலையில், திடீரென்று காணாமல் போயிருந்ததற்கான காரணத்தை பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து நஸ்ரியா நசீம் கூறியிருப்பதாவது: நீங்கள் அனைவரும் நலமாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். நான் ஏன் சில மாதங்களாக தொடர்புகொள்ள முடியாத நிலையில் இருந்தேன் என்பது குறித்து இப்போது பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். உங்களில் பலருக்கு தெரியும், நான் எப்போதும் சமூக வலைத்தளங்களில் தீவிரமாக இயங்கி வருவேன் என்ற விஷயம். எனினும், கடந்த சில மாதங்களாக எனது உடல்நிலை கோளாறு மற்றும் தனிப்பட்ட சவால்களால் கடுமையாக போராடி வருகிறேன். அவை எனக்கு அனைவருடனும் தொடர்பில் இருப்பதை கடினமாக்கி விட்டது என்பதே உண்மை. எனது 30வது பிறந்தநாள் மற்றும் புத்தாண்டு மட்டுமின்றி, நான் நடித்த 'சூக்ஷமதர்ஷினி' என்ற படத்தின் வெற்றி விழா உள்பட பல முக்கியமான தருணங்களை கொண்டாட கூட தவறவிட்டேன். நான் ஏன் தொடர்புகொள்ள முடியாத சூழ்நிலையில் இருந்தேன் என்பதை விளக்காததற்கும், நீங்கள் விடுத்த அழைப்புகளை எடுக்காததற்கும் அல்லது அதற்கு பதில் அளிக்காததற்கும் அனைத்து நண்பர்களிடமும் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்படுத்திய சிரமத்துக்கு உண்மையிலேயே வருந்துகிறேன். நான் முழுமையாக வெளியுலகை தொடர்புகொள்வதை நிறுத்திவிட்டேன்.

வேலைக்காக என்னை தொடர்பு கொள்ள முயற்சித்த எனது சக ஊழியர்கள் அனைவருக்கும் எனது மன்னிப்பை தெரிவித்துக் கொள்கிறேன். நான் இல்லாததால் ஏற்பட்ட இடையூறுகளுக்கு வருந்துகிறேன். ஒரு நல்ல விஷயமாக, நேற்று முன்தினம் சிறந்த நடிகைக்கான கேரள திரைப்பட விமர்சகர்கள் விருது பெற்றதை பகிர்ந்து கொள்வதில் அதிக மகிழ்ச்சி அடைகிறேன். அனைத்து அங்கீகாரத்துக்கும் மிகுந்த நன்றி. நான் முழுவதுமாக குணமாக இன்னும் சில காலமாகும். எனினும், நாளுக்குநாள் குணமடைந்து வருகிறேன். இந்த நேரத்தில் உங்கள் புரிதலுக்கும், ஆதரவுக்கும் நன்றி சொல்கிறேன். முழுமையாக திரும்ப எனக்கு இன்னும் சிறிது காலம் தேவைப்படலாம். ஆனால், நான் மீள்வதற்கான பாதையில் இருக்கிறேன் என்பதில் மட்டும் உறுதி அளிக்கிறேன். உங்கள் அனைவரையும் நேசிக்கிறேன். விரைவில் மீண்டும் இணைகிறேன். உங்கள் முடிவில்லாத ஆதரவுக்காக அனைவருக்கும் நன்றி. இவ்வாறு நஸ்ரியா நசீம் கூறியுள்ளார். அவரது அறிக்கை திரையுலகினர் மத்தியில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவரது உடல்நிலை குறித்து ரசிகர்கள் பல்வேறு யூகங்களை வெளியிட்டு வருகின்றனர்.

ADITYA BIRLA CAPITAL

PROTECTING INVESTING FINANCING ADVISING

ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்

பதிவு அலுவலகம்: இந்தியன் ரேயான் வளாகம், வேரவல், குஜராத் 362266.
கிளை அலுவலகம்: அலகு #10 & 12, 4ஆவது தளம், ஓவல் வெங்கட் நாராயண் சாலை, தி.நகர், சென்னை 600017.

"பிற்சேர்க்கை IV-A" [பார்க்க விதி 8(6)]
அசையாச் சொத்துக்கான விற்பனை அறிவிப்பு

ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிட். மற்றும் ஆதித்ய பிர்லா கேபிடல் லிட். ஆகிய இரு நிறுவனங்களுக்கும் இடையேயான இணைப்பு காரணமாக, 11.03.2024 தேதியிட்ட இணைப்புத் திட்டத்தின்படி, தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் – அகமதாபாத் 24.03.2025 அன்று பிறப்பித்த உத்தரவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. [illegible] SARFAESI [illegible] 2002 [illegible]

[illegible] 18.04.2025 [illegible] ரூ.3,03,30,723.88/- [illegible] 20.11.2024 [illegible] 20.05.2025 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது. இதன் நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத் தொகை விவரங்கள் பின்வருமாறு:

அசையாச் சொத்துக்களின் விவரம்	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை (%10)
அடுக்கக எண் F2, பிளாக் எண் 4 அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் முன்மொழியப்பட்ட கட்டடம். மனை எண் 4, சர்வே எண் 299/4A, 299/5B, பரப்பளவு 510 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு 1755 சதுர அடியில் அடங்கியது மற்றும் "கிராண்டியூர்" என அறியப்பட்ட திட்டத்தின் பிளாக் எண் 4, முதல்தளத்தில் உள்ள அடுக்கக எண் F2, 3 BHK, மேல்கட்டுமானப் பரப்பு 1435 சதுர அடி மற்றும் தரை தளத்தில் அமைந்துள்ள ஒரு மூடப்பட்ட கார்நிறுத்துமிடம் உட்பட. அமைவிடம் – ராஜேந்திரா காலனி, வண்டலூர் – கேளம்பாக்கம் சாலை, கேளம்பாக்கம், சாத்தங்குப்பம் கிராமம், புதுப்பாக்கம் வருவாய் கிராமம், வண்டலூர் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம். எல்லைகள்: வடக்கு: சர்வே எண் 299/1B-இல் உள்ள நிலம், தெற்கு: 24 அடிச் சாலை, கிழக்கு: சர்வே எண் 299/4B-இல் உள்ள நிலம், மேற்கு: மனை எண் 3. இது திருப்போரூர் சார்பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.	ரூ. 59,32,582.50/-	ரூ. 5,93,258.25/-
அடுக்கக எண் S1, பிளாக் எண் 4, அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் முன்மொழியப்பட்ட கட்டடம். மனை எண் 4, சர்வே எண் 299/4A, 299/5B, பரப்பளவு 368 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு 1755 சதுர அடியில் அடங்கியது மற்றும் "கிராண்டியூர்" என அறியப்பட்ட திட்டத்தின் பிளாக் எண் 4, இரண்டாவது தளத்தில் உள்ள அடுக்கக எண் S1, 2 BHK, மேல்கட்டுமானப் பரப்பு 1072 சதுர அடி மற்றும் தரை தளத்தில் அமைந்துள்ள ஒரு மூடப்பட்ட கார்நிறுத்துமிடம் உட்பட. அமைவிடம் – ராஜேந்திரா காலனி, வண்டலூர் – கேளம்பாக்கம் சாலை, கேளம்பாக்கம், சாத்தங்குப்பம் கிராமம், புதுப்பாக்கம் வருவாய் கிராமம், வண்டலூர் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம். எல்லைகள்: வடக்கு: சர்வே எண் 299/1B-இல் உள்ள நிலம், தெற்கு: 24 அடிச் சாலை, கிழக்கு: சர்வே எண் 299/4B-இல் உள்ள நிலம், மேற்கு: மனை எண் 3. இது திருப்போரூர் சார்பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.	ரூ. 44,88,950/-	ரூ. 4,48,895/-
அடுக்கக எண் S2, பிளாக் எண் 4, அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் முன்மொழியப்பட்ட கட்டடம். மனை எண் 4, சர்வே எண் 299/4A, 299/5B, பரப்பளவு 510 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு 1755 சதுர அடியில் அடங்கியது மற்றும் "கிராண்டியூர்" என அறியப்பட்ட திட்டத்தின் பிளாக் எண் 4, இரண்டாவது தளத்தில் உள்ள அடுக்கக எண் S2, 3 BHK, மேல்கட்டுமானப் பரப்பு 1435 சதுர அடி மற்றும் தரை தளத்தில் அமைந்துள்ள ஒரு மூடப்பட்ட கார்நிறுத்துமிடம் உட்பட. அமைவிடம் – ராஜேந்திரா காலனி, வண்டலூர் – கேளம்பாக்கம் சாலை, கேளம்பாக்கம், சாத்தங்குப்பம் கிராமம், புதுப்பாக்கம் வருவாய் கிராமம், வண்டலூர் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம். எல்லைகள்: வடக்கு: சர்வே எண் 299/1B-இல் உள்ள நிலம், தெற்கு: 24 அடிச் சாலை, கிழக்கு: சர்வே எண் 299/4B-இல் உள்ள நிலம், மேற்கு: மனை எண் 3. இது திருப்போரூர் சார்பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.	ரூ. 59,32,583/-	ரூ. 5,93,258.30/-
அடுக்கக எண் F1, பிளாக் எண் 4, அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் முன்மொழியப்பட்ட கட்டடம். மனை எண் 4, சர்வே எண் 299/4A, 299/5B, பரப்பளவு 368 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு 1755 சதுர அடியில் அடங்கியது மற்றும் "கிராண்டியூர்" என அறியப்பட்ட திட்டத்தின் பிளாக் எண் 4, முதல் தளத்தில் உள்ள அடுக்கக எண் F1, 2 BHK, மேல்கட்டுமானப் பரப்பு 1072 சதுர அடி மற்றும் தரை தளத்தில் அமைந்துள்ள ஒரு மூடப்பட்ட கார்நிறுத்துமிடம் உட்பட. அமைவிடம் – ராஜேந்திரா காலனி, வண்டலூர் – கேளம்பாக்கம் சாலை, கேளம்பாக்கம், சாத்தங்குப்பம் கிராமம், புதுப்பாக்கம் வருவாய் கிராமம், வண்டலூர் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம். எல்லைகள்: வடக்கு: சர்வே எண் 299/1B-இல் உள்ள நிலம், தெற்கு: 24 அடிச் சாலை, கிழக்கு: சர்வே எண் 299/4B-இல் உள்ள நிலம், மேற்கு: மனை எண் 3. இது திருப்போரூர் சார்பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.	ரூ. 44,88,950/-	ரூ. 4,48,895/-
அடுக்கக எண் S1, பிளாக் எண் 5, அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் முன்மொழியப்பட்ட கட்டடம். மனை எண் 5, சர்வே எண் 299/4A, 299/5B, பரப்பளவு 367 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு 1649 சதுர அடியில் அடங்கியது மற்றும் "கிராண்டியூர்" என அறியப்பட்ட திட்டத்தின் பிளாக் எண் 5, இரண்டாவது தளத்தில் உள்ள அடுக்கக எண் S1, 2 BHK, மேல்கட்டுமானப் பரப்பு 1070 சதுர அடி மற்றும் தரை தளத்தில் அமைந்துள்ள ஒரு மூடப்பட்ட கார்நிறுத்துமிடம் உட்பட. அமைவிடம் – ராஜேந்திரா காலனி, வண்டலூர் – கேளம்பாக்கம் சாலை, கேளம்பாக்கம், சாத்தங்குப்பம் கிராமம், புதுப்பாக்கம் வருவாய் கிராமம், வண்டலூர் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம். எல்லைகள்: வடக்கு: 24 அடி அகலமுள்ள சாலை, தெற்கு: சர்வே எண் 299/7-இல் உள்ள நிலம், கிழக்கு: சர்வே எண் 299/4B & 299/6 ஆகியவற்றில் உள்ள நிலம், மேற்கு: மனை எண் 6. அளவீடு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் – 19.9 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் – 24.6 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் – 68.5 அடி, வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் – 56.11 அடி, வடக்கு மேற்காக மூலைவிரிவு – 12.53 அடி. இது திருப்போரூர் சார்பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.	ரூ. 44,58,875/-	ரூ. 4,45,887.50/-
அடுக்கக எண் S1, பிளாக் எண் 8, அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் முன்மொழியப்பட்ட கட்டடம். மனை எண் 8, சர்வே எண் 299/4A, 299/5B, பரப்பளவு 581 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு 2441 சதுர அடியில் அடங்கியது மற்றும் "கிராண்டியூர்" என அறியப்பட்ட திட்டத்தின் பிளாக் எண் 8, இரண்டாவது தளத்தில் உள்ள அடுக்கக எண் S1, 3 BHK, மேல்கட்டுமானப் பரப்பு 1648 சதுர அடி மற்றும் தரை தளத்தில் அமைந்துள்ள ஒரு மூடப்பட்ட கார்நிறுத்துமிடம் உட்பட. அமைவிடம் – ராஜேந்திரா காலனி, வண்டலூர் – கேளம்பாக்கம் சாலை, கேளம்பாக்கம், சாத்தங்குப்பம் கிராமம், புதுப்பாக்கம் வருவாய் கிராமம், வண்டலூர் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம். எல்லைகள்: வடக்கு: சர்வே எண்கள் 299/1B & 299/2B ஆகியவற்றில் உள்ள நிலம், தெற்கு: சாலை, கிழக்கு: மனை எண் 2, மேற்கு: சாலை. இது திருப்போரூர் சார்பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.	ரூ. 67,92,550/-	ரூ. 6,79,255/-

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடுபெற்று கடனளித்த நிறுவனத்தின் https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx அல்லது https://sarfaesi.auctiontiger.net இணையத்தளத்தில் வழங்கப்பட்டுள்ள இணைப்பை காணவும்.

நாள்: 17.04.2025
இடம்: சென்னை.
க.க.எண்: ABCHNPOP00000586500

ஆதித்யா பிர்லா கேபிடல் லிமிடெட் நிறுவனத்திற்கு
ஒம்/-/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
(9176697772)

மும்மொழி கொள்கையின்படி

மகாராஷ்டிரா பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயம்

மும்பை, ஏப்.18: 2025-26ம் கல்வியாண்டு முதல் 1 முதல் 5ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு மூன்றாவது மொழி பாடமாக இந்தி கட்டாயம் கற்பிக்கப்பட வேண்டும் என்று மகாராஷ்டிர அரசு அறிவித்துள்ளது. தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்துவதன் ஒரு பகுதியாக இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

ஒன்றிய அரசு கொண்டு வந்த தேசிய கல்விக் கொள்கையை, மகாராஷ்டிராவில் ஆளும் பாஜ அரசு அமல்படுத்தி வருகிறது. இந்த தேசியக் கல்விக் கொள்கை, மும்மொழிக் கொள்கையை ஊக்குவிக்கிறது. அதனை செயல்படுத்தும் விதமாக, தற்போது அனைத்து பள்ளிகளிலும் 1ம் வகுப்பு முதலே 3வது மொழிப்பாடமாக இந்தி கட்டாயம் கற்பிக்க வேண்டுமென அரசு உத்தரவிட்டுள்ளது.

முன்பு, மும்மொழிக் கொள்கை இடைநிலைக் கல்வி முதல் அமல்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இப்போது மராத்தி, ஆங்கில வழிப் பள்ளிகள் அனைத்திலும் 1ம் வகுப்பு முதலே இந்தி கற்பிக்க வேண்டும். மராத்தி, ஆங்கிலத்தை தவிர்த்து இது மாணவர்களுக்கு 3வது மொழியாக இருக்கும். தேசியக் கல்விக் கொள்கை 5+3+3+4 என்ற புதிய கல்வி அமைப்பை முன்மொழிகிறது. முதல் 5 வருடம் அடித்தளக் கல்வி, 3 வருடம் ஆயத்த படிப்பு, அடுத்த 3 வருடம் நடுநிலைக் கல்வி மற்றும் 4 வருடங்கள் இடைநிலைக் கல்வி என 4 கட்டங்களாக கல்வியை கற்பிக்க முன்மொழிகிறது. அதன் அடிப்படையில், ஆரம்பக் கல்வியில் மாற்றத்தைக் கொண்டு வரும் விதமாக மகாராஷ்டிர அரசு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. ஆனால் மாநில அரசின் இந்த முடிவுக்கு கல்வியாளர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இது குறித்து முன்னாள் பள்ளிக் கல்வி இயக்குநர் வசந்த் கல்பாண்டே கூறுகையில், 'இந்தியை கட்டாயமாக்குவது நியாயமல்ல. தமிழ், கன்னடம், தெலுங்கு போன்ற இந்திய மொழிகளில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுக்கும் விருப்பம் மாணவர்களுக்கு இருக்க வேண்டும்' என்றார். ஆசிரியர் அமைப்பு ஒன்றின் ஒருங்கிணைப்பாளர் பவுசாகேப் சாஸ்கர் கூறுகையில், '1ம் வகுப்பு முதலே மாணவர்களுக்கு 3 மொழிகளை கற்பிப்பது நடைமுறையில் சாத்தியமில்லை. குழந்தைகள் ஏற்கனவே மராத்தி படிக்கவும், எழுதவும் சிரமப்படுகிறார்கள். இப்போது அவர்களுக்கு இந்தியையும் சேர்த்து கற்பித்தால் மாணவர்களுக்கு கூடுதல் அழுத்தம் ஏற்படும். இதுமட்டுமல்லாது, மகாராஷ்டிராவில் உள்ள பெரும்பாலான தொடக்கப் பள்ளிகளில் 2 ஆசிரியர்கள் மட்டுமே இருக்கின்றனர். அவர்கள் 3 மொழிகளை எப்படி கற்பிக்க முடியும்' என்று கூறினார்.

காச வாங்கி ஓட்டு போட்டா மிருகமா தான் பொறப்பீங்க

சாபம் விட்ட பாஜ பெண் எம்எல்ஏ

இந்தூர், ஏப். 18: 'பணம், மதுபானம், பரிசுப் பொருட்களை வாங்கிக் கொண்டு ஓட்டு போடுபவர்கள் மறுஜென்மத்தில் மிருகமாகத்தான் பிறப்பார்கள்' என மபியில் பாஜ எம்எல்ஏ உஷா தாக்கூர் சாபமிட்ட சம்பவம் வைரலாகி உள்ளது.

மத்தியபிரதேசத்தை சேர்ந்த மவ் சட்டப்பேரவை தொகுதி எம்எல்ஏவும் முன்னாள் அமைச்சருமான உஷா தாக்கூர், தனது தொகுதிக்கு உட்பட்ட ஹசல்பூர் கிராமத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்ச்சியில் பேசிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி உள்ளது.

உஷா தாக்கூர் பேசுகையில், "பாஜ ஆட்சியில் பெண்கள், விவசாயிகளுக்கு நிதி உதவி திட்டம் மூலம் தலா ரூ.1000 வழங்கப்படுகிறது. அப்படியிருந்தும், ஆயிரத்துக்கும், ஐநூறுக்கும் ஆசைப்பட்டு உங்கள் ஓட்டுக்களை விற்றால் அது மனித இனத்திற்கே அசிங்கம். கடவுள் பார்த்துக் கொண்டிருக்கிறார். யார் யார், பணத்தையும், மதுவையும், பரிசுப் பொருளையும் வாங்கிக் கொண்டு ஓட்டு போடுகிறார்களோ அவர்கள் அடுத்த பிறவியில் நாய், பூனை, ஒட்டகம், ஆடாகத்தான் பிறப்பார்கள். இதை உங்கள் டைரியில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்" என கூறியதோடு, "நான் கடவுளிடம் நேரடியாக பேசுபவள், நம்புங்கள்" என பெரிய குண்டையும் தூக்கி போட்டுள்ளார். இதெல்லாம் பிற்போக்குத்தனமான பேச்சு என காங்கிரஸ் விமர்சித்துள்ளது.

தமிழ்நாடு அரசு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாடு திட்டம்- 2024-2025
மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண்:3121/2024/D1 நாள்: 15.04.2025

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்
2. கோயம்புத்தூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அவர்களால் காரமடை ஊராட்சி ஒன்றியத்தில் கான்கிரீட் சாலை அமைத்தல் பணிக்கு மின் மறு ஒப்பந்தப்புள்ளி (E-Tender) (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியாக ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 21.04.2025 முதல் 29.04.2025 வரையிலான காலத்தில் எடுத்துக்கொள்ளலாம்

(i) மின் ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	29.04.2025 மாலை 3.00 மணி வரை
(iii) மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்	29.04.2025 மாலை 4.00 மணி முதல்.

கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி),
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்புத்தூர்.

செமதொஇ /1604/ ஒப்பந்தப்புள்ளி/2025

Can Fin Homes Ltd
(Sponsor: CANARA BANK)

கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்
பெருங்குடி கிளை
எண்.14, 1வது தளம், பழைய மகாபலிபுரம் சாலை,
கந்தன்சாவடி, பெருங்குடி, சென்னை - 600 096.
போன்: 044 - 2496 5656, 76250 79151
மின்னஞ்சல்: omr@canfinhomes.com

CIN NO.L85110KA1987PLC008699

சுவாதீன அறிவிப்பு (விதி 8(1)) (அசையா சொத்துக்களுக்காக)

கீழே கையொப்பமிட்டவர் கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கின்றபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 மற்றும் மேற்கூறிய சட்டத்தின் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி 17.01.2025 தேதியிட்ட ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி கடன்தாரர்களான திரு.S. தமிழரசன், த/பெ. திரு.சம்பத் (கடன்தாரர்), மற்றும் 2. திருமதி. S.சத்திய பிரியா, க/பெ.திரு.S.தமிழரசன், (இணை கடன்தாரர்),) மற்றும் திரு.R. நீலகண்டன், (ஜாமீன்தாரர்), ஆகியோர்களுக்கு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கடன் பாக்கி தொகையான ரூ.51,62,166/- (ரூபாய் ஐம்பத்து ஒரு லட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நூற்று அறுபத்து ஆறு மட்டும்) மற்றும் ஒப்பந்தத்தின் படி மற்றும் கடன் வசூலாகும் தேதி வரையிலான பின்வட்டியுடனான தொகையை மேற்கூறிய அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பி செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர் தொகையை திருப்பி செலுத்தத் தவறியுள்ளனர், இதன் மூலம் கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இதன்கீழ் விவரிக்கப்பட்ட சொத்தினை 16.04.2025 நாளில் சுவாதீனம் மேற்கொண்டுள்ளார்.

கடனீட்டு சொத்துக்களை மீட்க உள்ள கால அவகாசம் தொடர்பாக மேற்குறிப்பிட்ட சட்டம்பிரிவு 13 உட்பிரிவு (8)-ன் கீழ் கடன்தாரரின் கவனம் வரவேற்கப்படுகிறது.

கடன்தாரருக்கு குறிப்பிட்டும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கையும் கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்டுக்கு ரூ.51,62,166/- (ரூபாய் ஐம்பத்து ஒரு லட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நூற்று அறுபத்து ஆறு மட்டும்) மற்றும் அதற்குரிய வட்டியுடன் செலுத்துவதற்கு உட்பட்டது.

அடமானத்திலுள்ள அட்டவணை சொத்தின் விவரங்கள் :
தென்சென்னை பதிவு மாவட்டம் மற்றும் அடையார் துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மாம்பலம் - கிண்டி தாலுகா, தற்போது வேளச்சேரி தாலுகா, கதவு எண்.34 (பழைய எண்.75),பிள்ளையார் கோவில் தெரு, சின்னமலை, சென்னை - 600 113 என்ற முகவரியில் சென்னை நகர மண்டல எண். XIII, மற்றும் வார்டு எண்.180-க்குட்பட்ட 06.05.2015 தேதியிட்ட வேளச்சேரி தாலுகா, தாசில்தார் அவர்களால் வழங்கப்பட்ட பட்டாவின் படி சர்வே எண்.14/1A, பழைய சர்வே எண்.14/1A பகுதி, 1 B பகுதி, புதிய சர்வே எண்.8-ன் படி மொத்தமுள்ள 2244 சதுர அடி பரப்பளவு நிலத்தில் 457 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் சத்தியம் என்கிளேவ் என பெயரிடப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் முதல் தளத்தில் 803 சதுர அடியில் (பொது பகுதி உட்பட) கட்டப்பட்டுள்ள பிளாட் எண். F1, அதனுடன் கார் நிறுத்தம் உட்பட மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: சாவித்திரி மற்றும் சந்தோஷ் ஆகியோர்களுக்கு சொந்தமான சொத்து (சர்வே எண்.7/2), தெற்கில்: விஸ்வநாதன் குடும்பத்தின் வீடு (சர்வே எண்.9), கிழக்கில்: பிள்ளையார் கோவில் தெரு (சர்வே எண்.34), மேற்கில்: IIT வளாக சுவர் (கிண்டி பூங்கா) . அளவுகள் (பட்டாவின் படி) : வடக்கில்: 25.4 மீட்டர், தெற்கில்: 22.2 மீட்டர், கிழக்கில் : 09.2 மீட்டர், மேற்கில்: 10.6 மீட்டர்.

நாள் : 17.04.2025
இடம்: பெருங்குடி

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அதிகாரி
கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
சொத்து வசூல் நிர்வாக கிளை

மூன்றாவது தளம், மத்திய அலுவலக வளாகம்,
763, அண்ணா சாலை, சென்னை-600 002,
Ph: 044-2851 9453 / 2842 0262 Email: iob1535@iob.in

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதிசொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி8(6)/9(1) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்து, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **ஆக்கப்பூர்வமான சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு கடன் பெற்றவர்களான **M/s.ஜெயின் கிரானைட்ஸ் அண்ட் ப்ராஜெக்ட்ஸ் இந்தியா லிமிடெட் அலுவலக முகவரி,** எண்.89-1, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை-600030 **அதன் சார்பாக இயக்குனர்கள் 1.Mr.சுனில் குமார் பாஃப்னா,** S/o. லேட் Mr.கிஷோப் சந்த் பாஃப்னா, **2. Mr.லலித் குமார் பாஃப்னா,** S/o. லேட் Mr.கிஷோப் சந்த் பாஃப்னா, **3. Mr.பிரதீப் குமார் பாஃப்னா,** S/o. லேட் Mr.கிஷோப் சந்த் பாஃப்னா, **4.Mr.அனில் பாஃப்னா,** S/o. லேட் Mr.கிஷோப் சந்த் பாஃப்னா, **5.Mrs.கமலா பாய் பாஃப்னா (காலமானவர்), அவரின் சார்பாக Mr.சுனில் குமார் பாஃப்னா, Mr.லலித் குமார் பாஃப்னா, Mr.பிரதீப் குமார் பாஃப்னா மற்றும் Mr.அனில் பாஃப்னா (கமலா பாய் பாஃப்னாவின் லேட், அவர்களின் சட்டப்படியான வாரிசுதாரர்கள் மற்றும் அவர்கள் சார்பாகவும் மற்றும் இதர சட்டப்படியான வாரிசுதாரர்கள் சார்பாகவும்) ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் 1-லிருந்து 4 வரை உள்ளவர்களின் முகவரி,** "ஜெயின் குரூப்ஸ் டவர்ஸ்", பழைய எண்.48, புதிய எண்.89/1, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை-600030 **மற்றும் 6.Mr.M.V.சுப்ரமணியன்,** S/o.Sri.மனோகரன், எண்.39/1, 21, 7வது குறுக்கு, பெசன்ட் நகர், சென்னை-600090 ஆகியோர்களிடமிருந்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கி-க்கு வரவேண்டிய கடன் தொகையான **31.03.2025** அன்றுள்ளபடி **₹ 57,46,25,790/-** (ரூபாய் ஐம்பத்து ஏழு கோடியே நாற்பத்து ஆறு லட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து எழுநூற்று தொண்ணூறு மட்டும்)ஐ வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் **05.05.2025** அன்று விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

SARFAESI சட்டத்தின் கீழ் ஏலத்தின் விவரம்

13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி	15.12.2019	
13(4)-ன் கீழ் சுவாதீனம் எடுத்த தேதி	14.02.2020	
பிரிவு 8(6)ன் கீழ் விற்பனை அறிவிப்பு	24.02.2020	
பிரிவு 9(1)ன் கீழ் விற்பனை அறிவிப்பு	**விற்பனை அறிவிப்பு தேதி** 08.06.2022, 15.11.2022, 02.02.2023 04.02.2025, 03.03.2025, 21.03.2025	**ஏல விற்பனை தேதி** 19.07.2022, 27.12.2022, 28.02.2023 27.02.2025, 20.03.2025, 09.04.2025

சொத்துக்கள் விபரம்

ஜட்டம் எண்.1: எண்.48 (கிழக்கு முன்பகுதி) ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை-600 030 என்னும் முகவரியில் **5801 சதுர அடி (தரைத்தளம் - 320 சதுர அடி + 1வது தளம் - 1827 சதுர அடி + 2வது தளம் - 1827 சதுர அடி + 3வது தளம் - 1827 சதுர அடி) வணிக நிலம், அதிலுள்ள கட்டிடம்,** அதனுடன் மொத்தமுள்ள 2 கிரவுண்ட் 1441 சதுர அடி (6241 சதுர அடி) நிலத்தில் **3/6 பிரிக்கப்படாத பங்கு. சொத்தானது Mrs.கமலா பாய் பாஃப்னா பெயரில் உள்ளது (ஜாமீன்தாரரில் ஒருவர்).**

ரிசர்வ் விலை ₹ 5,71,00,000/- EMD ₹ 57,10,000/- ஏல உயர்வுத்தொகை ₹ 5,00,000/-

ஜட்டம் எண்.2a: எஞ்சிய சொத்தானது Mr.R.லலித் பாஃப்னா பெயரில் உள்ளது. எண்.48, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை-600 030 என்னும் முகவரியில் **முதல் தளத்தில் (பின்பக்க பகுதி) 1300 சதுர அடி பிளாட்,** அதனுடன் மொத்தமுள்ள நிலத்தில் 1/6 பங்கு அதாவது **1040.16 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம். சொத்தானது Mr.R.லலித் பாஃப்னா பெற்ற வீட்டு கடனுக்காக ஏற்கனவே அடமானத்தில் உள்ளது.**

ஜட்டம் எண்.2b: எஞ்சிய சொத்தானது Mr.பிரதீப் பாஃப்னா பெயரில் உள்ளது. எண்.48, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை-600030 என்னும் முகவரியில் **இரண்டாவது தளத்தில் (பின்பக்க பகுதி) 1300 சதுர அடி பிளாட்,** அதனுடன் மொத்தமுள்ள நிலத்தில் 1/6 பங்கு அதாவது **1040.16 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம். சொத்தானது Mr.பிரதீப் பாஃப்னா பெற்ற வீட்டு கடனுக்காக ஏற்கனவே அடமானத்தில் உள்ளது.**

ஜட்டம் எண்.2c: எஞ்சிய சொத்தானது Mr.அனில் பாஃப்னா பெயரில் உள்ளது. எண்.48, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை-600 030 என்னும் முகவரியில் **மூன்றாவது தளத்தில் (பின்பக்க பகுதி) 1300 சதுர அடி பிளாட்,** அதனுடன் மொத்தமுள்ள நிலத்தில் 1/6 பங்கு அதாவது **1040.16 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம். சொத்தானது Mr.அனில் பாஃப்னா பெற்ற வீட்டு கடனுக்காக ஏற்கனவே அடமானத்தில் உள்ளது.**

ரிசர்வ் விலை ₹ 6,14,00,000/- EMD ₹ 61,40,000/- ஏல உயர்வுத்தொகை ₹ 5,00,000/-

இ-ஏலம் நடைபெறும் தேதி & நேரம்: 05.05.2025, மதியம் 02.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை
https://baanknet.com- ல் விற்பனை முடியும் வரை தலா 10 நிமிடங்கள் கொண்ட நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்.

விலைக்குறிப்பீடு படிவத்தினை EMD உடன் ஆன்லைனில் சமர்பிக்கும் தேதி : 21.04.2025 முதல்

விலைக்குறிப்பீடு படிவத்தினை EMD உடன் ஆன்லைனில் சமர்ப்பிக்க கடைசி தேதி : **05.05.2025,** மதியம் 1.00 மணி வரை

சொத்துக்களை பார்வையிடும் தேதி & நேரம்: முன் அனுமதி பெற்று வேலை நேரத்தில் பார்வையிடலாம்.

தொடர்புக்கு: Rameshwar Soren - Mob: 88022 43377

*** சட்டப்பூர்வ நிலுவைத்தொகையை விட வங்கியின் நிலுவைத்தொகைகளுக்கு முன்னுரிமை உண்டு. **மேலே குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச கேட்பு விலையில் பொருந்தக்கூடிய TDS சேர்க்கப்படவில்லை.** விலைக்குறிப்பீட்டாளர் / சொத்தை வாங்குபவர் குறைந்தபட்ச கேட்பு விலை அதனுடன் ஏல உயர்வுத்தொகைக்கான 1.00% வருமான வரி / TDS-ஐ செலுத்த வேண்டும். ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் ஏலத்தில் பங்கேற்பதற்கு முன் கடன்தாரர் நிறுவனத்தின் மின்கட்டண பாக்கி, சொத்து வரி பாக்கி, இதர சட்டப்படியான நிலுவைகள் முதலானவற்றைக் குறித்து தாங்களே விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும். இதற்கு வங்கி எந்த வகையிலும் பொறுப்பேற்காது.

வருமான வரிச்சட்டம் 1961, பிரிவு 194 1A-க்கு இணங்க, விற்பனை விலையில் வருமான வரி, குறைந்தபட்ச கேட்பு விலையில் பொருந்தும் வட்டி சதவிகிதம் பிடித்தம் செய்து சொத்தினை வாங்குபவரின் PAN அட்டையின் படி செலுத்த வேண்டும். [illegible] TDS [illegible] வருமான வரிச்சட்டம் 1991 பிரிவு 194 (O)-ன்படி [illegible] TDS செலுத்த வேண்டியது.

ஏல விற்பனை குறித்த விரிவான விவரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனளித்த வங்கியின் இணையதளத்தில் பார்வையிடலாம்: 1. https://baanknet.com, 2. www.iob.in

தேதி : 16.04.2025; இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோர்களுக்கு சம்பந்தப்பட்ட கடனீடான மேற்குறித்த தேதியில் நடைபெறும் இ-ஏலம் குறித்த 2002 [illegible] விதிகளின் விதி 8(6) மற்றும் விதி 9(1)-ன் கீழான அறிவிப்பும் இதுவாகும்.

GRIHUM

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக பூனாவாலா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். என அறியப்பட்டது)
பதிவு அலுவலகம்: 6-வது தளம், B கட்டடம், [illegible], புனே - 411014.

கோரிக்கை அறிவிப்பு
சர்பாசி சட்டம், 2002 பிரிவு 13(2)-ன் கீழ்

[illegible] CE [illegible] 2002-ன் பிரிவு 13(2)-ன் கீழ் [illegible] 2002 சட்டம் பிரிவு 13(2) [illegible] விதி 3(1)-ன் படி [illegible]

[illegible] பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டது மற்றும் அதன் கீழ் கோரப்பட்ட தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன்தாரர், உப கடன்தாரர், ஜாமீன்தாரர் பெயர் மற்றும் கடன் தொகை	கடனீட்டுச் சொத்தின் விவரம்	கோரிக்கை அறிவிப்பு நாள் / நிலுவைத் தொகை ரூ.
15	N ரவிச்சந்திரன், உஷா R, கனகதாரா ஸ்டீல் மெட்டல் வொர்க்ஸ் கடன் தொகை: ரூ.3354890/- கடன் எண்:HM0028H18100049	[illegible]	09/04/2025 ரூ.3629831/- (ரூபாய் முப்பத்தாறு லட்சத்து இருபத்தொன்பதாயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்று மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் நாள் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 15.85%, மேல்வட்டி உட்பட.

[illegible] 60 நாட்களுக்குள் [illegible] பிரிவு 13(13) [illegible]

இடம்: தமிழ்நாடு
தேதி: 16.04.2025

ஒம்-அதிகாரப்பூர்வ அதிகாரி,
க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது)

SBI

பாரத ஸ்டேட் பாங்கு
ஒடுக்கப்பட்ட சொத்து நிர்வாகக் கிளை
ரெட் கிராஸ் வளாகம், எண்.32, ரெட் கிராஸ் ரோடு, எழும்பூர்,
சென்னை-600 008 Ph: 044 - 2888 1022, மின்னஞ்சல்: sbi.04105@sbi.co.in

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் விவரம் : Mrs.B.சிந்து, செல்: 88383 38084, 90944 52976 போன்: 044-2888 1029

அசையா சொத்துகளுக்கான விற்பனை அறிவிப்பு Appendix - IV-A [See Proviso to Rule 8(6)]

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 கடனீட்டு சொத்துக்கள் அமலாக்க விதிகள் 2002 விதி எண். 8(6)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

இதன்மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பதாவது, ஈடுபெற்று கடன் வழங்கியுள்ள வங்கிக்குச் சேரவேண்டிய 31.03.2025 அன்றுள்ளபடி ₹ 18,03,76,454.59 (ரூபாய் பதினெட்டு கோடியே மூன்று லட்சத்து எழுபத்து ஆறாயிரத்து நானூற்று ஐம்பத்து நான்கு மற்றும் பைசா ஐம்பத்து ஒன்பது மட்டும்) கடன் பாக்கியை வட்டி, இதர செலவுகளையும் சேர்த்து வசூலிப்பதற்காக கடன் வழங்கிய வங்கியிடம் அடமானம் வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் ஈடுபெற்று கடன் வழங்கிய பாரத ஸ்டேட் பாங்கு, ஒடுக்கப்பட்ட சொத்து நிர்வாகக் கிளை, சென்னை அதிகாரப்பூர்வ அதிகாரி ஆக்கபூர்வமான / அடையாளபூர்வமான சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டுள்ளார். **அந்தச் சொத்துக்கள் "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** எனும் அடிப்படையில் **09.05.2025 அன்று விற்பனை செய்யப்படும்.**

கடன்தாரர் பெயர்: M/s.சித்திக் இன்ப்ராஸ்ட்ரக்சர் பிராஜக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. Siddique Infrastructure Projects Private Limited) B1, 1வது தளம், A பிளாக், பார்சன் பாரடைஸ் அப்பார்ட்மெண்ட்ஸ், எண்.109, GN செட்டி ரோடு, தி.நகர், சென்னை-600 017. **ஜாமீன்தாரர்கள் பெயர்: 1.Mr.குலாம் மஹ்மூத் சித்திக்,** S/o.குலாம் அஹமது சித்திக், **2.Mrs.சோபியா ஜமீர்,** W/o.குலாம் மஹ்மூத் சித்திக், இருவரது முகவரி: எண்.3, நவாப் ஹபிபுல்லா அவின்யூ, 3வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை -600 006, **3.Mrs.ஆயிரா முகமது சித்திக்,** D/o.லேட் Mr.முகமது சித்திக், கதவு எண்.12B, ரூசி கார்டன், ரூசி ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006, **4. Mr.அப்துல் காலிக் சித்திக்,** S/o.லேட் Mr.முகமது சித்திக், கதவு எண்.12B, ரூசி கார்டன், ரூசி ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006 **மேலும் முகவரி,** 7, F எண்.1A, 1வது தளம், பௌர்ணமி டவர், மாண்டியத் சந்து, எழும்பூர், சென்னை - 600008

அசையா சொத்துக்கள் விபரம்

மூலப்பத்திரதாரரின் பெயர் (Name of Title Deed Holder) : **M/s.Siddique Infrastructure Projects Pvt Ltd**

ஜட்டம் எண்.1: சர்வே எண்.88/3-ல் 14 செண்ட், சர்வே எண்.88/4-ல் 44 செண்ட், சர்வே எண்.142/2-ல் 11 செண்ட், (விற்பனை பத்திரப்படி சர்வே எண்.144/2) 142/3-ல் 9 செண்ட், (விற்பனை பத்திரப்படி சர்வே எண்.144/3) 145/8-ல் 24 செண்ட், வளர்புரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் மொத்த பரப்பு 102 செண்ட் காலி நிலம். M/s.சித்திக் இன்ப்ராஸ்ட்ரக்சர் பிராஜக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்கு சொந்தமானது. **(ஆவண எண்கள். 587/08 & 589/08-க்கு உட்பட்டது)**
வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கம் ஏதும் இல்லை. சர்வே எண்.88/3-ல் 14 செண்ட் காலி நிலம், SBI-யிடம் 13வது பிரதிவாதியாக Shri.S.ஜாயின் ஜெயகுமார், காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு தவிர.

ரிசர்வ் விலை: ₹ 75,00,000/-; டேவணித்தொகை (ரிசர்வ் விலையில் 10%): ₹ 7,50,000/-; ஏல உயர்வு தொகை: ₹ 2,00,000/-

ஜட்டம் எண்.2: சர்வே எண்.43/4-ல் 32 செண்ட், சர்வே எண்.46/5-ல் 13 செண்ட், வளர்புரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் மொத்த பரப்பு 45 செண்ட் காலி நிலம். M/s.சித்திக் இன்ப்ராஸ்ட்ரக்சர் பிராஜக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்கு சொந்தமானது. **(ஆவண எண். 4813/08-க்கு உட்பட்டது)** வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கம் ஏதும் இல்லை.

ரிசர்வ் விலை: ₹ 33,00,000/-; டேவணித்தொகை (ரிசர்வ் விலையில் 10%): ₹ 3,30,000/-; ஏல உயர்வு தொகை: ₹ 1,00,000/-

ஜட்டம் எண்.3: சர்வே எண்.39/2B-ல் 54 செண்ட், சர்வே எண்.39/2C-ல் 9 செண்ட், சர்வே எண்.45/1-ல் 56 செண்ட், சர்வே எண்.91/1A-ல் 35 செண்ட், சர்வே எண்.120/2-ல் 38 செண்ட், சர்வே எண்.134/1-ல் 7 செண்ட், வளர்புரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் மொத்த பரப்பு 1 ஏக்கர் 99 செண்ட் காலி நிலம். M/s.சித்திக் இன்ப்ராஸ்ட்ரக்சர் பிராஜக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்கு சொந்தமானது. **(ஆவண எண்.588/08-க்கு உட்பட்டது)** வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கம் ஏதும் இல்லை.

ரிசர்வ் விலை: ₹ 1,45,00,000/-; டேவணித்தொகை (ரிசர்வ் விலையில் 10%): ₹ 14,50,000/-; ஏல உயர்வு தொகை: ₹ 5,00,000/-

குறிப்பு: விலைப்புள்ளிகளைச் சமர்ப்பிப்பதற்கு முன், ஆர்வமுள்ள ஏலதாரர்கள், சொத்தின் தன்மையை நேரில் பார்த்து ஆய்வு செய்து தங்களை திருப்தி செய்து கொள்ள வேண்டும். சொத்தின் உரிமைப்பத்திரங்கள் பிற அசல் ஆவணங்கள் CC No.18/2021 வழக்கு தொடர்பாக CBI வழக்குகளுக்கான மாண்புமிகு XI கூடுதல் சிறப்பு நடுவர், சென்னை-600 001 அவர்கள் வசம் வைக்கப்பட்டுள்ளன.

13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி : 27.10.2017 | **13(4)-ன் கீழ் சுவாதீன அறிவிப்பு தேதி : 11.01.2018**

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 09.05.2025, காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை - ஒவ்வொரு 10 நிமி. இடைவெளிகளுடன் வரையறையற்ற இன்றி நடத்தப்படும்

டேவணித்தொகை செலுத்த கெடு: இ-ஏலத்தேதிக்கு சற்று முன்பு வரை

03.05.2025 அன்று காலை 9.00 மணி - மதியம் 12.30 மணி வரை சொத்துக்களை பார்வையிட Mrs.B.சிந்து - செல்: 88383 38084, Mr.R.ராஜன் - செல்: 90944 52976-ஐ தொடர்புகொள்ளவும்.

EMD **செலுத்தும் முறை:** PSB Alliance-ன் இ-ஏல தளத்தில் https://baanknet.com கொடுக்கப்பட்டுள்ள வாலட்டில் ஏலதாரர்கள் தாங்களாகவே 10% ரிசர்வ் விலையை NEFT மூலமாக பணப்பரிமாற்றம் / பணம் செலுத்திக் கொள்ளலாம்.
வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் PSB Alliance என்ற நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் https://baanknet.com மூலம் ஏலம் நடத்தப்படும்.
மின் ஏல விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இ-ஏல விலைக்குறிப்பீடு படிவங்கள் மற்றும் இதர விவரங்களுக்கு, https://baanknet.com & https://sbi.co.in/web/sbi-in-the-news/auction-notices/sarfaesi-and-others என்ற இணையதளத்தை பார்க்கவும். **இந்த விற்பனை வருமான வரிச்சட்டம் பிரிவு 194-IA ஏற்பாடுகளின் படி வரி விதிப்பிற்கு உட்பட்டது.**

தேதி : 08.04.2025, இடம் : சென்னை
உதவி பொது மேலாளர் & அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பாரத ஸ்டேட் பாங்கு, SAMB, சென்னை